# பொதுத் தமிழ் வரியிலக்கணம்.

1. தமிழகமும் அகத்தியனார் பொதிய மலையும் இவ்வுலகின் முதலூழியிலிருந்து இருக்கின்றனவென் பதையும், நடு ஆசியாவும் சிவனார் கைலைமலையும் கடையூழிக்குச் சற்று முன்பே யுண்டாயினவென்பதையும் இற்றைக்குமுள்ள நிலநூலார்களால் மறுக்கவொல்லாதன.

2. இப்போதுள்ள தமிழ் நூல்களிலெல்லாம் மிகவும் தொன்மையானது 'பழங்காப்புச் சொல்" என்றுபொருள்படும் "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூலேயாம். இது பாணினியின் வடமொழி யிலக்கணத்திலும் பழையது.

3. தமிழ் மொழியின் அசையா நிலைமையானது உலகமொழிகளின் நிகழ்ச்சியில் ஓர் அருங்காட்சி.

4. தமிழ் மொழியின் அசையா நிலைமைக்குப் பொருட்டு, எழுத்துக்களில் மூச்சுச்செட்டு, சொற்களில் எழுத்துச்செட்டு, சொற்றொடர்களில் சொற்செட்டு, உள்ளத்தில் உன்னங்கள் எவ்வரிசையிற் கிளம்புகின்றனவோ அவ்வரிசையில் சொற்சேர்க்கை யமைத்தல், இயற்கை யொலியிலக்கணப்படி சொற்களைப் புணர்த்தல், பொருட் கேற்ற ஓசைகள் சொற்களிலேயே அமைந்திருத்தல் முதலான இயற்கை மொழியிலக்கணங்கள் செறிந்திருத்தலேயாம்.

RangaRakes tamilnavarasam.com

5. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளந்து வதூஉம் செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறுவதும் தமிழிலக்கணத்தின் முறையாம்.

6. ஒரு மக்கட் பகுப்பாருடைய நாகரிகம் இன்னதென அறிவதற்கு அவர்கள் வழங்கிய மொழி ஓர் அளவு கருவியாம்.

7. பண்டைத் தமிழருடைய, ஒழுக்கம், வழக்கம் பழக்கம், கோட்பாட்டியல், குழூஉவியல், ஆட்சியியல், மற்றைய இயல்கள் யாவும் பழந் தொல்காப்பியத்துள் அறியக் கிடக்கின்றன.

8. ஒரு பகுப்பாருடைய முதற் பேச்சு, சொற்களாகப் பிரிதலே அவர்கள் நாகரிகத்தின் தோற்றுவாய்க்கு அறிகுறியாம்.

9. அவர்கள் சொற்கள், எழுத் தொலியாகப் பிரிதல் அவர்களுடைய நாகரிகத்தின் மேல் வளர்ச்சிக்கு அறிகுறியாம்.

10. எப் பகுப்பாருடைய மொழியும், உச்சி நிலையை யடைதற்கு அவர்கள் கூட்டொலிகள் தனி யொலிகளாகப் பிரிதலே அறிகுறியாம்.

11. ஒரு பகுப்பாருள் சில கலைஞர்களால் அவர்களுடைய மொழியிலக்கணம் முற்றிய தன்மையை யடையச் செய்தல் கூடுமாயினும், ஆட்சிகளிற் சிறந்த வாட்சியினும், அவ்வாறு முற்றிய மொழியிலக்கணத்தைப் பொது மக்களும் கையாளச் செய்வது எளிய தன்று.

RangaRakes tamilnavarasam.com

12. ஆங்கில மொழியின் எழுத்துப் பழுதும், உலகம் பரவிய ஆட்சிவன்மையுடன் கூடியோராயினும் தங்கள் எழுத்துக்களை இலக்கண வரம்பிற் குள்ளாக்க முயன்ற முயற்சிகள் பயன்படா தொழிந்தமையும்.

13. தமிழர்கள் தங்கள் மொழியில் இயற்கை யிலக்கண வரையறைகள் பெற்றும் முற்றும் ஆண்டனர், இன்னும் ஆண்டு வருகின்றனரென்பது தமிழ் மொழியாலும் அதன் தொல்காப்பியத்தாலும் புலப்படுகின்றது.

14. மக்கள் பேச்சுறுப்புக்களால் இயக்கக்கூடிய னல்லாத தனியொலிகளும் குறைவின்றித் தம்மெழுத்துக்களுள்ளும் மொழியினுள்ளும் இருக்கின்றன,

15. கூட்டொலிகளைத் தனியெழுத்துக்களாகப் பிறமொழிகள் எண்ணுவதுபோல தமிழ், தாடலை தெரியாது எண்ணுவதில்லை.

16. மற்றைய மொழிகள் போலாது, தனி முயற்சியாலாகும் எழுத்தொலிகளிவை யென்றும், முயற்சிவேற்றுமையா லாக்கக் கூடிய எண்ணிறந்த எழுத்தொலிகளிவை யென்றும் தமிழ் பாகுபடுத்தி யுணர்த்துகின்றது.

17. வரியிலக்கணமுறைகளுள் சிறந்த விரண்டாவன, ஒலிக்குக்குறி யீடுதரும் ஒலிமுறையும் முயற்சிக்குக் குறியீடுதரும் உறுப்பு முறையுமாம்.

18. ஒலி முறையே பிறமொழிகளாலும், இண்டர் நாஷனல் பொனடிகல் அசோஷியேஷன் காரர்களாலும் வழங்கப்படுகின்றது.

RangaRakes tamilnavarasam.com

19. ஒலி முறையின் செல்லைக் குறுக்கமும் வலியின்மையும்.

20. உறுப்பு முறையிலே தமிழெழுத்துக்களாக் கப்பட்டிருக்கின்றன.

21. எல்லா மக்களுக்கும் ஒரே வகையாகப் பேச்சுறுப்புக்கள் அமைந்திருத்தலின், உறுப்பு முறை யெப்பகுப்பார் ஒலியடையேயும் குறிக்கலாய ஆற்றலுடையது.

22. பேச்சுறுப்புக்களின் தனி முயற்சிகளின் சின்மையும் அதனானே அவைகளுக்குக் குறியீடு தருதலின் எளிமையும்.

23. ஒலிக் குறியீடுகள் தவிரு து செவிப்புலனும் ஒலிகளையே குறிப்பன, ஆனாலோ உறுப்புக் குறியீடுகள் பற்பல ஒலிகளைப்பா முயற்சிகளையுங் குறிப்பன.

24. மக்கள் பேசுஞ் செவிக்கு வேறுவேறாகப் புலப்படும் ஒலிகள் எண்ணிறந்தன. ஆயினும் அவ்வெல்லா ஒலிகளும், எளிதில் குறியீடு பெறக்கூடிய பேச்சுறுப்புக்களின் தனிமுயற்சிகளாலாவது கூட்டு முயற்சிகளாலாவது கிளம்புவனவே.

25. ஒலிப்பதற்குச் செய்யும் முயற்சிகளின் வரிசையை யொட்டி முயற்சிக் குறியீடுகளை வரையின் அவ்வொலியலின் திருத்தமான வரிவடிவமாகின்றது. அன்றியும், நினைத்தபோது வரிவடிவிற் குறித்த முயற்சிகளை மீண்டும் செய்யவும் அதனாலே ஒலிகளைப் பழையபடி யுண்டாக்கவும் இடம் தருகின்றது.

RangaRakes tamilnavarasam.com

26. ஒலிக்குறியீடு, உறுப்புக் குறியீடு என்னும் இரண்டுமுறைகளில் எம்முறையைக் கைப்பற்றினும் சரி, ஒருவர் பேச்சொலியின் குரல்போலவே மற்றொருவர் உண்டாக்குவது, பின்னையவருடைய பேச்சுறுப்புக்களின் அசைவும் ஒரே மாதிரியாக இருந்தாலன்றி இயலாது. ஆனாலும், உறுப்புக் குறியீட்டு முறையில் எழுத்தொலிகளின் அடையாளம் திருத்தமாகக் காணவியலும்.

27. கைக்கொண்ட வரியிலக்கணம் ஏதேயாயினும், குழிந்தவண்ண ஆராபியன் தட்டையண்ண ஜப்பானியன் தடித்தவிதழ்க் காபிரி மெல்லியவிதழ் ஆங்கிலன், கழுகு மூக்குக் காக்காசியன் சப்பை மூக்கு சீனன், மிடறுமுட்டிய துருக்கன் வளைகழுத்துடை இந்திய மடநகை, இவர்களுள் இவ்விருவர்க்குள்ள குரல் வேற்றுமைகளை அகற்றல் இயலாது.

28. தமிழ் எழுத்துக்கள், பேச்சுறுப்புக்கள் யாவற்றிற்கும் ஒக்க வேலைகொடுத்தலால், தமிழைப் பயின்றோர் யாவரும் பிற மொழிகளைத் திருத்தமாக ஒலிப்பது எளிது.

29. உறுப்புக்குறியீட்டுத் தமிழ்முறையில் ஒலிகளைக் கிளப்புவதற்காக ஊக்கும் உள்ளப் போக்குகளையே இன்னவெனச் சூத்திரவுரைவுகள் எளிதாக விளக்குகின்றன. ஊக்கும் உள்ளப் போக்கின்படி முயன்றால் பேச்சுறுப்பு மாறுதல்கள் தாமாயே நிகழ்கின்றன. ஆதலின் இம்மாறுதல் விவரங்களைச் சூத்திரவுரைவுகள் பொருட்படுத்தவில்லை.

RangaRakes tamilnavarasam.com

30. உளளத்தால ஊக்கப்படும் அத்தகைய முயறசிகள, உயிர், ஒற்று, சார்பென மூவகையன.

31. உயிர் முயற்சிகள ஒற்று முயற்சிகளின் மீதூருந் தகையன, சார்பு முயற்சிகள, உயிர் ஒற்றெனும் இரண்டன் மீதூர் ஊருந்தகையன.

32. உயிர், ஒற்று, சார்பு என்பனவற்றின் சூத்திரவரைவுகள.

33. மென் முயற்சியுயிர்கள ஏழும் வன்முயற்சியுயிர்கள ஐந்துங்கொண்ட உயிர் வரையறை.

34. ஒன்றினின் றொன்றிற்குமாறும் உயிர முயறசிகளுள தனிக்குறியீடுகளபெற்ற சிறநத இரண்டும, கூட்டுக்குறியீடுகளபெறும அத்தகைய பிற உயிர் முயற்சிகளும.

35, ஆறு வலலின, ஆறுமெல்லின, ஆறு இடையின ஒற்று முயறசிகளும அவைகளின் குறியீடுகளும.

36 குறைந்தது இரண்டு குறியீடுகளாற் காட்டப பெற்ற ஐநது சார்பு முயற்சிகள.

37. மூவகை முயற்சிகளின் இடமாற்றும், கலவையும், அவைகளாற் கிளம்பும் எண்ணிறந்த ஒலி வேற்றுமைகளும், அவைகளுக் கேற்ற குறியீட்டுச் கலவைகளும்.

38. தொடர் முயற்சிகளும், உடனிகழ் முயற்சிகளும், அவைகளுக்கேற்ற குறியீட்டுக் கலவைகளும் ஒலி வேற்றுமைகளும்.

RangaRakes tamilnavarasam.com

39. மூச்சு இழுக்கும்போது செய்யும் எழுத்து முயற்சிகளும், அவைகளின் குறியீடுகளும், ஒலிகளும்.

40. தமிழ் வரியிலக்கணமே ஓர் தனி அறிவு நூலெனல்.

41. உடற் கூற்றியலும், கோட் பாட்டியலும், தமிழெழுத்துக்களுக்கு அடிப்படை யென்பது.

42. பண்டை யெழுத்தியலுள்ள தமிழெழுத்தின் இருப்பிடம் இன்னதெனல்.

43. பழய வட்டெழுத்தின் ஆராய்ச்சியும், பாலியினின்று தமிழ் எழுத்துக்கள் உண்டாயின வென்னும் கோபிநாதராயர் கொள்கை யாராய்ச்சியும்.

44. தமிழெழுத்துக்களின் காலம் எதுவாயிருக்குமெனல்.

45. தமிழெழுத்துக்களுக்கு வடிவங்கள் இயற்றுகையில் முற்றிய முறை கடைப்பிடிக்கப் பெற்றிருக்கின்றதெனல்.

46. தமிழ் எழுத்துக்களின் கூறுகளில், ஒத்த கூறுகள் ஒத்த ஒலி முயற்சிக் கூறுகளைக் காட்டுகின்றன.

47. எழுத்து வெட்டுகளிற் றோன்றுகிறபடி, கால நிகழ்ச்சியில் தமிழெழுத்து வடிவங்கள் அடைந்த மாறுதல்கள்.

48. எல்லாமக்கள் எழுத்தொலிகளையும் வரையும் வன்மையைத் தமிழெழுத்துக்கள் மறுபடியும்

RangaRakes tamilnavarasam.com

அடைவதற்கு அவைகளிற்சில அடைந்த மாறுதல் களைத் திருத்திப் பண்டை அறிவு நூல் முறைப்படி அமைத்தல் வேண்டுமென்பன.

49. ஆய்த எழுத்தின் வடிவை இழந்தமையும், பின் பெஸ்கியால் அது திரிந்த வடிவுடன் வந்துற்றமையும்.

50. இரண்டு குற்றுயிர்கள் எகர ஒகரமும், இரண்டு சார்புகள் குற்றியலுகர குற்றிய லிகரமும் இழந்துவிட்ட புள்ளிகளும், பெஸ்கியால் அவைகள் வருவிக்கப்பட்டமையும், மறுபடியும் அவைகள் போய் மறைந்தமையும்,

51 வேறு வேறு மக்கட் பகுப்பாருடைய எழுத்தொலி முயற்சியில் ஆம் சிறு வேற்றுமைகளை யும் எழுத்தின் திரிபால் உணர்தற் கேற்றபடி தமிழ் வடிவங்கள் நிறுவப்பட்டிருக்கிற, வியக்கத்தக்க ஆக்க நுட்பம்.

52. தமிழ் டகாரமும, பல்லோரம் முதற் கொண்டு அண்ணத்தின் உச்சிகாறும் வேறு வேறு இடங்களில் டகார ஒலி வேற்றுமைகளுக்கு ஏற்றபடி டகா ரத்தின் முடக்கைச் சரிசெய்துக் கொள்ளக்கூடியதும.

53. அவ்வாறே சரி செய்துக்கொள்ளக் கூடிய லகாரவடிவம்.

54. அவ்வாறே சரிசெய்துக் கொள்ளக்கூடிய யகாரவடிம்.

55. அவ்வாறே மற்றைய தமிழ் வடிவங்களும் சரி செய்துக் கொள்ளக் கூடியன வென்பது.

RangaRakes tamilnavarasam.com

56. அதிர்ச்சி பொருந்திய ஒலிகளை அதிர்ச்சியின்றிய, அதாவது குசுகுசுத்த வொலிகளாக மாற்றுவதும், அவ்வாறே, தமிழெழுத்தில அதிர்ச்சியொலி வடிவங்களும் குசுகுசுத்த வொலிவடிவங்களும்.

57. பின்வரும மொழிகளின் எழுத்தொலிகளுக்கு உறுப்பு முயற்சி விவரமும் அவைகளுக்குத் தமிழ் வரிவடிவங்களும் :—

(a) சான்ஸ்கிரிட்.

(b) தெலுங்கு.

(c) கன்னடா.

(d) மலேயாளம.

(e) துளு.

(f) கொங்கிணி.

(g) சௌராஸ்ட்ரம.

(h) உரியா.

(i) பெங்காலி.

(j) ஹிந்தி.

(k) உருது.

(l) அரபிக்.

(m) ஹீப்ரு.

(n) மராத்தி.

RangaRakes tamilnavarasam.com

(o) குஜராத்தி.

(p) சிங்களம்.

(q) மலாய.

(r) பர்மீ.

(s) திட்டப்படுத்திய இங்கிலீஸ்.

(t) ப்ரெஞ்ச.

(u) இதாலியன்.

(v) வெல்ஷ்.

(w) லாதின.

(x) க்ரீக்.

(y) ஸ்பானிஷ்.

(z) பிறமொழிகள

58. பல மொழியாளரும பேசும் வழக்கவோசைகளுககு உறபபு முயறசிவிவரமும அவைகளுக்குத் தமிழ்க்குறியீடுகளும.

59. குடிவெறியொலிப்புகளும, வருத்த ஓசைகளும, மகிழ்ச்சி, எக்களிப்பு ஓசைகளும, உட்பொருட்டு புறப்பொருட்டுகளால வேற்றுமையுற்ற பிறவொலிகளும, அவைகளின் உறபபு முயற்சிகளும் அதற்கேறற தமிழ்க்குறியீடுகளும.

60. பேச்சுறுப்புக்கள சிதைந்தோர் செய்யும ஒலிகளை எதுவரையில தமிழ்ப் பொது எழுத்துக்கள் வரையு மாற்றலுடையன வென்பது.

RangaRakes tamilnavarasam.com

61. கூழாங் கல்லையாவது இலையையாவது வாயி லிட்டுக்கொண்டு பேசுவோர் பேச்சு முழுவதையும் தமிழ்ப் பொதுவெழுத்துக்கள் எழுதும் ஆற்றலில்லன வென்பதும் ஏனென்பதும்.

62. மேற்கத்தையோருடைய ஒலியியல் தேற்றங்களின் சுருக்கமும் பொதுத்தமிழ் வரியிலக்கணத்தின் அருமையை உணர்வதற்கு அது பயன்படுவதும்.

63. மேற்கத்தையோர் வழங்கும் அவிழ்க்கு முறையின் (analytical system) வேற்றுமைப் பாட்டை தமிழ் வரியிலக்கணக் கட்டு முறையின் (synthetical system) ஒற்றுமைப்பாட்டில் இணைத்துக்காட்டல்.

64. பொது வரியிலக்கணத்தை யுள்ளடக்கிய தமிழர் கட்டுமுறை (synthetic) அறிவு நூற்களுக்கு அடிப்படையான இயற்கை யுண்மையியல் இன்னதென்பது.

65. மாந்தரால் ஆக்கப்பெற்றவர்கள் உருவுடைக் கடவுளர்களென்னும் பண்டைத் தமிழர் அகந்தைக் கொள்கையும் அவர்களுடைய பொது வரியிலக்கணத்தை யுள்ளடக்கிய நிலைபொருள் அறிவுநூல்கள் முதிர்ச்சி யுறுவதற்கு அத்தகைய கோட்பாடு பயனுண்மையும்.

66. தமிழ் மொழிவாழ்த்துப் பல்லொலிப்பா.

---

RangaRakes tamilnavarasam.com